## பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைக்கு எதிரான கொள்கை பேராதனைப் பல்கலைக்கழகம்

இக்கொள்கை பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைக்யைத் தடுப்பதற்கான வழி, மற்றும் பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை காரணமாகப் பாதிக்கப்பட்ட நபர்கள் முறைப்பாடு செய்வதற்கான ஒரு பொறிமுறையினையும் வழங்குகிறது. பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பாக 25.05.2019 அன்று நிறைவேற்றப்பட்ட கொள்கைக்குப் பதிலீடாகவும் இந்தக் கொள்கை அமையும். இக்கொள்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கீழ் வரும் நபர்களுக்கும், இடங்களுக்கும் பொருந்தும்.

### I. பொதுக் கொள்கை அறிக்கை

பேராதனைப் பல்கலைக்கழகம் யாவருக்கும் பாலின வேற்றுமை இல்லாதவாறு, பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை அற்ற ஒரு கற்கும் சூழலையும், பணியிடத்தையும் பேணுவதற்குக் கடமைப்பட்டுள்ளது. பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை ஆகியன பல்கலைக்கழகக் கொள்கை மற்றும் சட்டம் ஆகிய இரண்டுக்கும் எதிரான செயற்பாடுகள் ஆகும். மனித கௌரவம், பால் சமத்துவம் மற்றும் முறையான செய்ன்முறைக்கான மரியாதை ஆகிய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு, இக்கொள்கையானது பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை என்றால் என்ன என்பதனை விபரித்து, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பாலியல் துன்புறுத்தல், பால்நிலை சார் துன்புறுத்தல், பாலியல் வன்முறை மற்றும் அவை தொடர்பான முறைப்படுகளுக்கு எதிராகக் கிளம்பும் பழிவாங்கல் செயன்முறைகள் ஆகியன எழுவதைத் தடுக்கும் வண்ணமும் அமைகின்றது. மற்றும் இக்கொள்கையானது பாலியல் துன்புறுத்தல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான விசாரணைகள் மற்றும் தண்டனைச் செயன்முறை ஆகியவற்றுக்கான பொருத்தமான நடைமுறைகளையும் வழங்குகின்றது.

இலங்கையில் பாலியல் தன்மை மிக்க துன்புறுத்தல்களும் மற்றும் வன்முறைகளும் தண்டனைச் சட்டத்தின் (1995இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய) பிரிவு 345 மற்றும் 363 இன் கீழ் குற்றவியல் மீறல்களாகக் கருதப்படுகின்றன. அத்துடன் 1998 இல் உருவாக்கப்பட்ட பகிடிவதை மற்றும் எல்லா விதமான வன்முறைகளையும் கல்வி நிறுவனங்களிலே தடுத்தல் என்ற 20ஆம் இலக்கச் சட்டத்தின் பிரிவு 2 (2) இன் பிரகாரம் உயர் கல்வி தொடர்பான சூழலிலே பாலியல் வன்முறை மற்றும் பாலியல் துன்புறுத்தல் போன்றன குற்றங்களாகக் கருதப்படுகின்றன. இலங்கையின் அரசியல் யாப்பானது பாலினப் பாகுபாடின்மை உள்ளடங்கலாகச் சமத்துவம் மற்றும் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படல் ஆகியவற்றுக்கான உரிமைக்கான உத்தரவாதத்தை அளிக்கின்றது (உறுப்புரை 12 (1) மற்றும் (2)). அத்துடன் யாப்பு சட்டபூர்வமான தொழில் ஒன்றிலே ஈடுபடுவதற்கான சுதந்திரத்திற்கான உத்தரவாதத்தையும் வழங்குகின்றது (உறுப்புரை 14 (1) (g)). இலங்கையின் சர்வதேசச் சட்டக் கடப்பாடுகள் வேலைத்தளத்தில் பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை ஆகியவற்றைத் தடுத்தலையும், மற்றும் பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல், மற்றும் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தீர்வுகளை வழங்குவதனையும் தேவைப்பாடுகளாகக் கருதுகின்றன.

**II. நோக்கம் மற்றும் பரப்பு**

1. பேராதனைப் பல்கலைகழகத்தில் சகலரினதும் சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றை மதிக்கும் வகையிலான ஒரு கலாசாரத்தை ஊக்குவிதல், பேணுதல்;

2. பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை உருவாகுவதை தடுத்தல்;

3. முறைப்படுகளுக்கான விசாரணை மற்றும் தீர்மானங்களை வழங்குவதில் உடனடியான, வினைத்திறனான மற்றும் நியாயமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்.

4. பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைகளால் பதிக்கப்பட்டவர்களுக்கான போதிய மற்றும் பொருத்தமான ஆதரவை வழங்கல்.

**III. வரைவிலக்கணங்கள்**

**ஒப்புதல்** எனப்படுவது முற்றாக அறிந்த நிலையில், ஆமோதிக்கும் வகையில், சுய விருப்புடன், சுயநினைவுள்ள நிலையில், மீளப்பெறக் கூடிய வகையில், செயல்பூர்வமாகப் பாலியல் நடவடிக்கைக்காக வழங்கப்படும் அனுமதியாகும். கண்டனம் இன்மை, எதிர்ப்பு இன்மை மற்றும் அமைதி காத்தல் ஆகியவை மாத்திரம் ஒப்புதல் என விளக்கமாகமாட்டா. வார்த்தைகள் மற்றும் செயல்கள் ஆகியன பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான விருப்பம் தொடர்பாகப் பஸ்பர விளக்கத்துடனான தெளிவான அனுமதியை உருவாக்கும் பட்சத்தில், ஒப்புதல் ஆனது வார்த்தைகள் மற்றும் செயல்களினால் தரப்படலாம். போதைப் பொருள், அல்கஹோல், உடல் சார் அல்லது அறிவுசார் இயலாமை அல்லது உணர்வற்றநிலை போன்றவற்றின் காரணமாக ஒருவர் வலுவற்றவராக இருப்பாராயின், அவரினால் தெளிவான ஒப்புதலினை வழங்க முடியாது. 16 வயதுக்கு உட்பட்ட எவரினாலும் ஒப்புதலினை முழுமையான சுதந்திரத்துடன் வழங்க முடியாது.

**பால்நிலை சார் துன்புறுத்தல்** என்பது, பால்நிலை, பால் நிலைத் தன்மை, பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை சார் வெளிப்படுத்தல்கள் சார்பான துன்புறுத்தல்களையும், பால் ரீதியான ஒருமைப்படுத்தி அவமதிக்கும் செயல்களையும் உள்ளடக்கும். வாய் மொழி மூலமான, வாய் மொழி மூலமற்ற, காட்சி சார்பான, உடல் ரீதியான, மற்றும் ஏனைய அச்சுறுத்தல், பலவந்தப்படுத்தல், வன்மமாகச் செயற்படல், பயமுறச் செய்தல், பகைமையினை ஏற்படுத்தும் ஆனால் பாலியல் ரீதியான நடத்தையினை உள்ளடக்காத செயல்களை பால்நிலை சார் துன்புறுத்தல் என்பது குறிக்கும். அத்துடன் இவ்வாறான துன்புறுத்தல் ஒரு பகைமைத் தன்மையான சூழலின் உருவாக்கத்துக்கு வழி செய்வதாகவும் அமையும்.

ஒரு அகவயமான அல்லது புறவயமான நியமத்தின் ஊடாக நோக்கும் போது, நடத்தையானது ஒரு தனிநபரானவர், பல்கலைக்கழகத்தினது கல்வி சார், தொழில் சார், மற்றும்/அல்லது வளாகத்திலே தங்குமிடம் சார் அனுபவங்களில் இருந்து நன்மை பெறுவதில் நியாயமற்ற முறையிலே குறுக்கீடு விளைவிப்பதாகவும், வரையறை செய்வதாகவும் அல்லது தடுக்கும் வகையில் போதுமான அளவுக்குக் கடுமையானதாகவும், தொடர்ச்சியானதாகவும், ஊடுருவிப் போய் இருப்பதாகவும் அமைகையில் அங்கு **பகைமைத் தன்மையான சூழல்** நிலவுகிறது. பகைமைத்

தன்மையாக ஒரு சூழல் தொடர்ச்சியானதும், ஊடுருவிப் போய் இருப்பதாகவும் அமையும் நடத்தையினால் அல்லது ஒரு தனித்த அல்லது தனிமைப்படுத்தப்பட்ட ஆனால் போதிய அளவு கடுமைத் தன்மையான சம்பவத்தினால் ஏற்படுத்தப்படலாம்.

**பதிலடி** ஆனது அச்சுறுத்தல்கள், மிரட்டல், பழிவாங்கல் மற்றும்/அல்லது இக்கொள்கையின் பிரகாரம் தடை செய்யப்பட்ட நடத்தையினை அறிவிக்கும் நபரொருவருக்கு எதிரான கல்வி மற்றும் தொழில் ரீதியிலான பாதகமான நடவடிக்கைகள் அல்லது முறைப்பாடு, விசாரணை, சீர்திருத்தல் அல்லது ஒழுக்காற்றுச் செயற்பாடுகளில் ஒருவர் பங்குபற்றியமைக்காக அவருக்கு எதிரொக மேற்கொள்ளப்படும் பாதகமான நடவடிக்கைகள்.

**பாலியல் துன்புறுத்தல்** என்பது ஏதாவது வரவேற்கத்தகாத பாலியல் சார்ந்த நடத்தையை (உடல் சார்ந்த, வாய்மொழி, சைகை, காட்சி அல்லது எழுதப்பட்ட), இப்படியான நடத்தைக்கு முகம் கொடுக்கும் ஒருவரின் மேல் இழைக்கப்படும் உடல் சார்ந்த, உளவியல் சார்ந்த அல்லது ஏனைய தீங்குகளை அல்லது எரிச்சலை உள்ளடக்கும்.

**பாலியல் வன்முறையானது** பாலியல் வன்கொடுமை, பாலியல் தாக்குதல், பாலியல் தொந்தரவு செய்தல், உள்ளக வன்முறை அல்லது இப்படியான செயல்களை செய்ய எத்தனித்தல், அத்துடன் பாலியல் சார்ந்த எண்ணத்துடன், ஒருவரின் சம்மதமின்றி அவரின் மீது இழைக்கப்படும் உடல் ரீதியான நடத்தை என்பவற்றினை உள்ளடக்கும்.

## IV. நடத்தை

### பொதுவானவை

இக்கொள்கையால் வரையறுக்கப்படும் நபர்கள் யாவரும் கொள்கையில் அடிக்கோடிடப்பட்டிருக்கும் மற்றும் பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல், பாலியல் வன்முறை மற்றும் முறைப்பாடுகளுக்கு எதிரன பதிலடி ஆகியவற்றைச் செய்வதிலிருந்து தம்மை தவிர்க்க வேண்டும்; பாலியல் துன்புறுத்தல் அல்லது பாலியல் வன்முறையைத் தூண்டுவதில் இருந்து ஒதுங்க வேண்டும்; பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல், பாலியல் வன்முறை மற்றும் முறைப்பாடுகளுக்கு எதிரான பதிலடி ஆகிய செயற்பாடுகளை மறைப்பதனை விலத்த வேண்டும்; பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல், பாலியல் வன்முறை மற்றும் முறைப்பாடுகளுக்கு எதிரான பதிலடி ஆகியவற்றைத் தடுப்பதற்காகப் பல்கலைகழகத்தினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்குப் பங்களிப்புச்செய்ய வேண்டும்; மற்றும் பால்நிலை, பால்நிலை அடயாளம், பால்நிலை வெளிப்பாடு, பால்நிலைத் தன்மை அல்லது பாலியல்பு ரீதியான வேறுபாடின்றி, யாவரையும் மதிக்கும் ஒரு கலாசாரத்தை ஊக்குவிக்கும் அறம் சார்ந்த நடத்தை விதிமுறைகளை நிலைநாட்டக் கடமைப்பட்டுள்ளனர்.

### தடை செய்யப்பட்ட நடத்தை

இக்கொள்கையானது இக் கொள்கையால் வரையறுக்கப்படும் நபர்கள் பிரிவு 3 இல் விவரிக்கப்பட்டவறான மற்றும் இக்கொள்கையுடன் இணைந்துள்ள உப சட்டங்கள் பற்றிய மேலும் முழுமையான அட்டவணை 1 இல் பட்டியலிடப்பட்டவாறான எந்தவொரு வடிவிலான பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல், பாலியல் வன்முறை

மற்றும் முறைப்பாடுகளுக்கு எதிரான பதிலடி ஆகியவற்றில் ஈடுபடுவதைத் தடை செய்கின்றது.

i. இந்தக் கொள்கையின் கீழ் வரும் எந்த ஒரு நபரும், ஒரு தனிநபருக்குத் தொழில் வழங்கல் தொடர்பிலோ அல்லது அவரது கல்வி சார் முன்னேற்றம் தொடர்பிலோ அல்லது தொழில் நன்மைகள் தொடர்பிலோ அல்லது தொழில் சார் செயற்பாடுகள் தொடர்பிலோ பாலியல் ரீதியான நன்மைகளையோ பாலியல் ரீதியான வேண்டுகோள்களையோ பெற்றுக்கொள்ளுவதனை ஒரு நிபந்தனையாக நேரடியாகவோ அல்லது உட்கிடையாகவோ முன்வைப்பதனைத் தவிர்க்க வேண்டும்.

ii. தனி நபரொருவர் பாலியல் நடத்தைக்கான அழைப்பினை நிராகரித்தமையினையோ அல்லது ஏற்றுக்கொள்ளாமையினையோ காரணமாகக் காட்டி அவரைப் பாதிக்கும் அல்லது அவரது தொழில் அல்லது கல்வி ரீதியிலான விடயங்களைப் பாதிக்கும் தீர்மானங்களை மேற்கொள்ளுவதனைத் தவிர்த்தல் வேண்டும்.

iii. தனி நபரொருவர் பாலியல் நடத்தைக்கான அழைப்பினை நிராகரித்தமையினையோ அல்லது ஏற்றுக்கொள்ளாமையினையோ அடிப்படையாகக் கொண்டு அவரது பணி அல்லது கல்வி ரீதியாலான செயற்பாடுகளிலே எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தல், அல்லது அச்சுறுத்தும், விரோதமான அல்லது தாக்கும் வண்ணமான பணிச் சூழல் அல்லது கல்விச் சூழலை உருவாக்குமாறு மற்றவர்களைத் தூண்டுதல் அல்லது மற்றவர்களைக் கோருதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

iv. பாலியல் துன்புறுத்தல், பாலியல் வன்முறை மற்றும் முறைப்பாடுகளுக்கு எதிரான பதிலடி ஆகியவற்றுக்கான முறைப்படியான அல்லது முறைகளுக்கு வெளியிலான முறைப்பாடுகளை மறைத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்; மற்றும்

v. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல், பாலியல் வன்முறைகளுக்காக அல்லது பதிலடி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தலினைத் தடுத்தல் வேண்டும்.

ஒரு தனிநபர் அல்லது ஒரு குழுவுக்கு எதிராக ஒரு தனிநபர் அல்லது ஒரு குழுவால் மேற்கொள்ளப்படும் பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும்/ அல்லது பாலியல் வன்முறை மற்றும்/ அல்லது முறைப்பாடுகளுக்கு எதிரான பழிவாங்கற் செயற்பாடுகள் ஆகியவை பேராதனைப் பல்கலைகழக்த்தின் கவுன்சிலினால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும்.

பல்கலைக்கழகமானது தடை செய்யப்பட்ட நடத்தைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து சரியான முறையிலும் திறம்படவும் செயற்படுவதுடன், பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான இக்கொள்கையை மீறும் நடத்தையைத் தடுப்பதற்கான, சரி செய்வதற்கான மற்றும் தேவை ஏற்படும் பட்சத்தில் ஒழுக்காற்றுப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

### V. இந்தக் கொள்கையின் ஆளுகைக்கு உட்பட்ட நபர்களும், இடங்களும்

i. பல்கலைக்கழகங்களின் சட்டத்தின் கீழ் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் நபர்கள் யாவரும் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயற்படுபவர்களும் இக் கொள்கையின் ஆளுகைக்கு உட்பட்டவர்களாக அமைவர். பல்கலைக்கழக நிர்வாக, கல்வி சார், கல்விசார் நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும் ஊழியர்கள், கல்வி

சாரா ஊழியர்கள் (அவர்கள் தற்காலிகமாகவோ, ஒப்பந்தத்திலோ அல்லது வருகை அடிப்படையிலானவர்களாகவோ கூட இருக்கலாம்), மாணவர்கள், தன்னார்வலர்கள், வெளியிலிருந்து சேவை வழங்குபவர்களின் கீழுள்ள ஊழியர்கள் ஆகியோர் இந்தக் கொள்கையினால் நிருவகிக்கப்படுவர்;

ii. பல்கலைக்கழக எல்லைகளுக்கு உள்ளேயாயினும் அல்லது வெளியேயாயினும் பல்கலைகழகத்தின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படும் செயற்பாடுகள் யாவும் இக் கொள்கையினால் ஆட்சிசெய்யப்படும். இக் கொள்கை தொடர்பான தேவைகளுக்கான பல்கலைக்கழக வளாகங்கள் மற்றும் இடங்கள் முறைப்பாடுதாரர் மற்றும் முறைப்பாட்டிற்குப் பதிலளிப்போர் ஆகியோர் தங்களது கடமை நிமித்தம் இருக்கும் இடங்களான பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் தங்குமிட வசதிகள், மருத்துவ சிகிச்சை நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகள், களத் தளங்கள், களப்பயணங்கள் மற்றும் விடுதிள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

iii. இக்கொள்கையினால் உள்ளடக்கப்படும் பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையுடன் தொடர்பான சம்பவங்களாவன:

a) பல்கலைக்கழக சமுதாயத்தைச் சேர்ந்த கல்வி மற்றும் கல்வி சார் உதவி ஊழியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள், மாணவ ஊழியர்கள், பயிற்றுநர்கள், ஆராய்ச்சி உதவியாளர்கள், பயிலுனர்கள், மாணவரல்லாத அல்லது ஊழியரல்லாத பல்கலைக்கழக நிகழ்வுகளிலே பங்குபற்றுபவர்கள் ஆகியோருக்கு இடையில் இடம்பெறும் சம்பவங்கள்;

b) படி நிலை சார் தொடர்புகளில் அல்லது சகபாடிகளுக்கிடையே நிகழும் சம்பவங்கள்; மற்றும்

c) ஏதாவது பால், பால் அடையாளத்தினை அல்லது பால்நிலை வெளிப்பாட்டினை உடைய தனி நபர்களுக்கிடையே நிகழும் சம்பவங்கள்.

தவறான நடத்தையை மதிப்பீடு செய்யும் போது, நடத்தைக்கான ஒட்டுமொத்த சந்தர்ப்பசூழ்நிலைகளும் கருத்திற்கொள்ளப்படும்.

இக்கொள்கையானது, குறிப்பாகக் கல்வி நிறுவனங்களுக்குள்ளே, பேச்சு மற்றும் கருத்திச் சுதந்திரத்திற்கான உரிமை தொடர்பான முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையிலே அமுலாக்கப்படும். இது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் யாப்பின் 14 (1) (a) உறுப்புரையில் உறுதிப்படுத்தப்பட்ட பேச்சு மற்றும் கருத்துரிமைக்கான சுதந்திரத்தினால் பாதுகாக்கப்படும் வெளிப்பாட்டு நடத்தையை தடை செய்யும் வகையில் விளக்கப்படுத்தப்படமாட்டாது. மற்றும் முறைசார் கற்பித்தல், கற்றல் மற்றும் பீட அங்கத்துவர் ஒருவரது கருத்துக்களையும் அல்லது வகுப்பறை மற்றும் பொது அவைகளின் முன்னிலையில் மாணவர்களது கல்வி, அரசியல், கலை அல்லது இலக்கிய வெளிப்பாடுகள் ஆகியவற்றின் போது மேற்கொள்ளப்படும் வெளிப்படுத்தல்களையும் தடை செய்யும் வகையில் விளக்கப்படுத்தப்படமாட்டாது.

## VI. வழிமுறைகள்

### பொறுப்பான அதிகாரிகள்

பேராதனைப் பல்கலைகழகத்தின் கவுன்சில் பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையை விசாரணை செய்வதற்கான குழு என அழைக்கப்படும் ஒரு குழுவை (CISGBHV) நியமிக்கும். இந்தக் குழுவனது 15

அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும்; பாலினச் சமத்துவத்தைக் கொண்டிருக்கும்; பல்கலைக்கழகச் சமுதாயத்தின் பல்வகைமையைப் பிரதிபலிக்கும்; சட்டப் பின்னணியைக் கொண்ட ஒருவர் விரும்பத்தக்க வகையில் உள்ளடங்கலாக 3 வெளி அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும். அங்கத்தவர்கள் இயலுமானவரை பால் நிலை தொடர்பாக உணர்திறனை வெளிப்படுத்தியவர்களிடையே இருந்தும், மற்றும் பாலினச் சமத்துவம், பாலின சமசந்தர்ப்பம் ஆகிய விடயங்கள் தொடர்பில் பங்காற்ற விரும்புவோர்களிடையேயும் இருந்தே தெரிவு செய்யப்பட வேண்டும். மற்றும் அவர்கள் பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்குப் பயிற்றப்படுவர். இக்குழுவானது துணவேந்தர் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்து ஆலோசித்து தேவை ஏற்படும் போது முறைசாரா வகையிலான தீர்வுச் செயன்முறைகளுக்கு இட்டுச்செல்வதற்கான நடுநிலைமையாளர்களை நியமிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

இக்குழுவானது பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையுடன் தொடர்பான முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டு அவற்றில் எவை விசாரிக்கப்படல் வேண்டும் என்பதனைத் தீர்மானிக்கும்; துணைவேந்தரின் கோரிக்கையின் பேரில் ஆரம்ப (*prima facie*) ஆதாரத்தைச் சேகரிப்பதற்கான ஆரம்ப கட்ட விசாரணைகளில் பங்கேற்கும்; மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளைத் துணைவேந்தருக்குச் சிபாரிசு செய்யும்.

**யார் முறைப்பாடு செய்யலாம்?**

இக்கொள்கையின் கீழ் உள்ளடக்கப்படும் நபர்கள் யாவரும் (இந்தக் கொள்கையின் பிரிவு 5 இனைப் பார்வையிடவும்) முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம். பல்கலைக்கழகத்துக்கு வரும் விருந்தினர்களும் மற்றும்/அல்லது பாதிக்கப்பட்டதாகக் கருதப்படும் நபருடன் தனிப்பட்ட முறையிலோ அல்லது தொழில் ரீதியிலோ தொடர்புபட்ட வேறு யாராவது மூன்றாம் நபர்கள், அல்லது இடம்பெற்றதாகக் கருதப்படும் துன்புறுத்தலுக்கான சாட்சிகளும் முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம்..

**தேவையான நடைமுறைகள்**

ஒரு முறைப்பாட்டை மேற்கொள்ளும் போதும் மற்றும் அதனுடனான நடைமுறைகளான ஆரம்ப கட்ட விசாரணை, சமரசம் மற்றும்/அல்லது முறையான விசாரணையில் பின்பற்றப்படும் ஒழுங்கு மற்றும் நடைமுறைகளாவன இக்கொள்கையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள உப சட்டங்களினால் ஆட்சிப்படுத்தப்படுகின்றன.

தடைசெய்யப்பட்ட நடத்தைக்காகக் குற்றம் சாட்டப்பட்ட நபர்/நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் உள்ளடங்கலாக உரிய செயன்முறைத் தேவைகள் கருதி இக்கொள்கையின் ஒழுங்கு விதிகளுக்கிணங்கப் பின்பற்றப்படும் சகல நடைமுறைகளும் பாரபட்சமற்றவை, நியாயமானவை, விழிப்பூட்டுபவை மற்றும் இரகசியமானவையாக அமையும்.

**மேன்முறையீடு**

ஒரு முறைப்பாட்டின் மீது பல்கலைகழகம் நடவடிக்கை எடுக்காது இருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது முறைப்பாடுதாரர் அல்லது பதிலளிப்பவர் பல்கலைக்கழக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் மீது திருப்தியடையாத பட்சத்தில் அவர்களுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையுள்ளது.

பல்கலைக்கழகத்தின் கவுன்சில் அவ்வாறான மேன்முறையீட்டினைப் பெற்றவுடன், ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் ஒழுக்காற்றுச் செயன்முறைகளுக்கமைய மேன்முறையீடு குறித்துக் கேட்பதற்காக அல்லது விசாரிப்பதற்காக ஒரு குழுவை நியமிக்கும். இவ்வாறு அமைக்கப்படும் மேன்முறையீட்டுக் குழு மேன்முறையீடு தொடர்பில் தான் கண்டறிந்த விடயங்கள் குறித்தும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றிய தனது சிபாரிசுகளினையும் கவுன்சிலுக்கு அறிவிக்கும்.

**இரகசியம் பேணும் தன்மை**

சகல முறைப்பாடுகள் தொடர்பாகவும் இரகசியத்தன்மை பேணப்படும். நேர்காணல் பதிவுகள் (ஏதாவது மேற்கொள்ளப்படின்), தொடர்பாடல்கள், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட அல்லது இந்த விடயம் தொடர்பில் அதிகாரம் பெற்ற நபர்களுக்கு மட்டுமே வெளிப்படுத்தப்படும் அல்லது தெரியப்படுத்தப்படும். விசாரணையில் பங்குபற்றும் யாராவது நபரொருவர் இரகசியத்தன்மை தொடர்பான விதிமுறைகளை மீறும் பட்சத்தில், அவரை விசாரணையில் இருந்து விலக்குமாறு பல்கலைக்கழகத் துணைவேந்தருக்குச் சிபாரிசு செய்யப்படும்.

**அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான நேர வரயறைகள்**

அறிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பாகக் கால வரையறை எதுவும் கிடையாது; ஆனால், முறைப்பாடுகள் நியாயமான கால எல்லைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையை விசாரணை செய்வதற்கான குழு முறைபாடுகளுடன் தொடர்பான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டும், பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஆலோசனைக்கு இணங்கவும், ஒரு குறிப்பிட்ட கால எல்லையைத் தீர்மானிக்கும். இவ்வாறான தீர்மானங்களுக்கான காரணங்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குக் கிடைக்கப்பெறக்கூடியதாகச் செய்யப்பட்ட வேண்டும்.

**ஒழுக்காற்று நடவடிக்கைகள்**

எந்தவொரு கல்வி, உதவிக் கல்வி, நிர்வாக, அல்லது கல்விசாரா, மாணவ, சேவை வழங்கும் அல்லது வதிவிட உறுப்பினராவது பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பாகக் குற்றவாளியாகக் கருதப்படும் பட்சத்தில் அவர் ஒழுக்காற்று நடவடிக்கைக்குள்ளாவார். அதே நபரால் அதே போன்ற ஒரு குற்றம் மற்றுமொரு முறை இழைக்கப்படும் பட்சத்தில் அவர் கூடிய தண்டனைக்குள்ளாவார். குற்றம் இழைத்ததாகக் காணப்பட்ட நபர் அல்லது நபர்களின் மீது பல்கலைக்கழக ஸ்தாபனக் கோவையின் அத்தியாயம் XXII இற்கு இணங்க பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கவுன்சில் தண்டனையினைத் தீர்மானித்து அதனை அமுல்படுத்தும்.

**VII. தடுப்பு நடவடிக்கைகள்**

I. இக்கொள்கையானது பல்கலைக்கழகச் சமூகத்தின் சகல தரப்பினராலும் பார்க்கக்கூடிய வகையிலும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் பிறெய்ல் ஆகிய மொழிகளிலும் உருவாக்கப்படுவதுடன், மாணவர் கையேடுகள், பல்கலைகழக நேர அட்டவணை மற்றும் பல்கலைகழ்க இணையத்தளம் ஆகியவற்றிலும் உள்ளடக்கப்படும். பல்கலைக்கழகமானது இக்கொள்கை தொடர்பான கவனத்தை

ஈர்க்கும் வண்ணம் ஒரு பக்க நீளமான பிரசுரம் ஒன்றினையும் மற்றும் அவசர தேவையின் போது அணுகப்பட வேண்டிய நபர்களின் தொடர்புத் தகவல்கள் ஆகியவற்றையும் பல்கலைக்கழகமானது தயாரித்து அவற்றினைப் பீட வளாகங்களிலும், மேலதிகமாக மாணவர் சிற்றுண்டிச்சாலை, பொது அறைகள், வதிவிட மண்டபங்கள், உடற்பயிற்சி மையம், பல்கலைக்கழகச் சுகாதார நிலையம் மற்றும் பல்கலைக்கழக விருந்தினர் இல்லம் ஆகியவற்றில் உள்ள அறிவித்தற் பலகைகளில் காட்சிப்படுத்தும்.

II. இக் கொள்கை தொடர்பான ஒரு விதியானது சகல ஊழியர் ஒப்பந்தங்களிலும், நியமனக்கடிதங்களிலும் உள்ளடக்கப்படும்.

III. இக்கொள்கையானது பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் சகல மாணவர் திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சிகளிலும் கலந்துரையாடப்படும்.

IV. பல்கலைக்கழகத்தின் கல்வி, உதவிக்கல்வி, நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்களினது ஊழியர் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் பாலியல் சமத்துவத்தை ஊக்குவித்தல் மற்றும் வேலைத்தளங்களில் பாலியல் கவன உணர்வை விருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு பகுதியை உள்ளடக்க வேண்டும். அவ்வாறான நிகழ்வுகளின் போது இந்தக் கொள்கை தொடர்பான ஒரு அமர்வும் இடம்பெறும். வதிவிட மண்டபங்களின் காப்பாளர் மற்றும் உதவிக்காப்பாளர் ஆகியோருக்கு இக்கொள்கை தொடர்பான விசேட பயிற்சி அமர்வுகள் நடாத்தப்படும்.

V. பல்கலைக்கழக மாணவர் சங்கங்களினது யாப்புக்கள், இக்கொள்கை மற்றும் பகிடிவதை மற்றும் கல்வி நிறுவனங்களின் சட்டத்தின் கீழான சகல வன்முறைகளுக்கான தடுப்பு ஆகியன தொடர்பான ஒரு குறிப்பை உள்ளடக்கும்.

VI. பல்கலைக்கழகம் வெளிவாரிச் சேவை வழங்குனர்களுடன் மேற்கொள்ளும் சகல சேவை ஒப்பந்தகளிலும், ஒப்பந்தத்தில் ஈடுபடும் எந்தத் தரப்பினராயினும், இக்கொள்கையினைக் கடைபிடிக்கக் கட்டாயப்பட்டுள்ளனர் என்பதனை சுட்டிக்காட்டும் ஒரு விதி அல்லது வாசகம் உள்ளடக்கப்படும்.

VII. பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான விளைவுகள் மற்றும் தடுப்பு ஆகியவற்றுக்குப் பதிலளிக்கும் வகையில் பல்கலைக்கழகமானது ஒரு பயிற்றப்பட்ட ஆலோசனைச் சேவையை வழங்கும். இக் கொள்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுடன் தொடர்புபட்ட எந்தவொரு நபரும் இச்சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

VIII. பாதிக்கப்பட்ட நபர் விரும்பும் பட்சத்தில் முறைப்பாட்டை நீதிமன்றத்தில் தொடர்வதற்குப் பல்கலைக்கழகம் உதவும்.

### விதிவிலக்கு (Savings)

பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான கொள்கைக்கு இணங்கத் தொடங்கப்படும் முதற் கட்ட விசாரணைகள் உள்ளடங்கலாக அனைத்து நடவடிக்கைகளும் இந்தக் கொள்கைக்கு இணங்கவே மேற்கொள்ளப்பட்டதாகக் கொள்ளப்படுவதுடன், இந்தக் கொள்கைக்கு இணங்க அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகவுமான அடிப்படையில் தொடரும்.